**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.05** **நாள் : 06.01.2025**

**மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கொசு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக, ரூ.2.06 கோடி மதிப்பிலான 30 புகைப்பரப்பும் இயந்திரங்கள் மற்றும் நீர்வழிப்பாதைகளில் மருந்து தெளிக்கும் 15 இயந்திரங்களை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் வகையில் ரூ.1.26 கோடி மதிப்பில் வாகனங்களின் மூலம் புகைப்பரப்பும் 30 இயந்திரங்கள் மற்றும் நீர்வழிப்பாதைகளில் மருந்து தெளிக்கும் வகையில் ரூ.80 இலட்சம் மதிப்பில் 15 வாகனங்களுடன் கூடிய கொசுக்கொல்லி மருந்து தெளிக்கும் இயந்திரங்கள் என மொத்தம் ரூ.2.06 கோடி மதிப்பிலான இயந்திரங்களை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று (06.01.2025) பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மாநகராட்சிப் பகுதிகளில் கொசுக்கள் மற்றும் கொசுப்புழுக்களை ஒழிக்கும் வகையிலும், கொசுத் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொசுக்களை கட்டுப்படுத்து பணிகளில் 938 நிரந்தரப் பணியாளர்கள், 2,446 தற்காலிகப் பணியாளர்கள் என மொத்தம் 3,384 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்தப் பணியாளர்கள் அரசு மற்றும் மாநகராட்சி கட்டடங்கள், பள்ளிகள், பூங்காக்கள், அரசு கட்டடங்கள், புதிய கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்கள் மற்றும் வீடுகள்தோறும் அன்றாடம் களஆய்வு மேற்கொண்டு, கொசுக்கள் மற்றும் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகக்கூடிய தண்ணீர் தேங்கும் இடங்களைக் கண்டறிந்து டயர்கள் மற்றும் உபயோகமற்ற பொருட்களை அப்புறப்படுத்தி, கொசுக்கொல்லி மருந்து தெளித்தும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், இதுகுறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வும் ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்தக் கொசு ஒழிப்புப் பணிகளை தீவிரப்படுத்தும் பொருட்டு, ரூ.67.20 இலட்சம் மதிப்பில் கையினால் இயக்கக்கூடிய 100 புகைப்பரப்பும் இயந்திரங்கள் மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களால் கடந்த 04.10.2024 அன்று 15 மண்டலங்களுக்கும் வழங்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கொசுக்களை கட்டுப்படுத்தும் பணிக்காக 322 மருந்து தெளிப்பான்கள், 54 பவர் மருந்து தெளிப்பான்கள், பேட்டரி மூலம் இயங்கும் 156 மருந்து தெளிப்பான்கள், கையினால் இயங்கும் 324 புகைப்பரப்பும் இயந்திரங்கள், வாகனங்களில் பொருத்தப்பட்ட 64 புகைப்பரப்பும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், கொசுப்புழுக்களைக் கட்டுப்படுத்த டெமிபாஸ் என்ற மருந்தும், நீர்வழிப்பாதைகளில் கொசுப்புழுக்கொல்லி எண்ணெயும் தெளிக்கப்பட்டு வருகிறது. வளர்ந்த கொசுக்களைக் கட்டுப்படுத்த கையினாலும், வாகனங்களிலும் எடுத்துச் செல்லும் புகைப்பரப்பும் இயந்திரங்கள் மூலம் கொசுப்புகை மருந்து அடிக்கப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக, கொசு ஒழிப்புப் பணியினை தீவிரப்படுத்தும் விதமாக, மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப் படி, கொசுப்புழுவை கட்டுப்படுத்த தலா ரூ.4.20 இலட்சம் மதிப்பில் மொத்தம் ரூ.1.26 கோடி மதிப்பில் 30 வாகனங்களில் புகைப்பரப்பும் இயந்திரங்களும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட நீர்வழிப்பாதைகளில் மருந்து தெளிக்கும் வகையில் ரூ.80 இலட்சம் மதிப்பில் 15 வாகனங்களுடன் கூடிய கொசுக்கொல்லி மருந்து தெளிக்கும் இயந்திரங்கள் என மொத்தம் ரூ.2.06 கோடி மதிப்பில் கொசு ஒழிப்பு இயந்திரங்கள் இன்று மாண்புமிகு மேயர் அவர்களால் மாநகராட்சியின பயன்பாட்டிற்குத் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு.ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், தலைமை பூச்சித் தடுப்பு அலுவலர் முனைவர் எஸ்.செல்வகுமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**